# அறந்தாங்கி நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2020 – 2021

# <u>அறந்தாங்கி நகராட்சி</u>
## 2020–2021 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

| | | |
|---|---|---|
| 1) | நகராட்சியின் பெயர் | : அறந்தாங்கி |
| 2) | நிலை | : முதல் நிலை நகராட்சி (நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்: நாள்.02.12.2008–ன்படி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது) |
| 3) | பரப்பு | : 7.10 சதுர கி.மீ |
| 4) | மக்கள் தொகை | :40829 (2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு |

<u>எல்லை</u>:-

அறந்தாங்கி நகராட்சி வடக்கே அறந்தாங்கி – பட்டுக்கோட்டை சாலையில் 0.4 கி.மீ என்ற இடத்திலிருந்தும், கிழக்கே அறந்தாங்கி – பேராவூரணி நெடுஞ்சாலையில் 0.6 கி.மீ என்ற இடத்திலிருந்தும், அறந்தாங்கி – கட்டுமாவடி நெடுஞ்சாலையில் 0.6 கி.மீ என்ற இடத்திலிருந்தும், தெற்கே அறந்தாங்கி – ஆவுடையார்கோவில் நெடுஞ்சாலையில் 0.6 கி.மீ என்ற இடத்திலிருந்தும், மேற்கே அறந்தாங்கி – புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் 0.8 கி.மீ இடத்திலிருந்தும், தென்மேற்கில் அறந்தாங்கி – காரைக்குடி சாலையில் 2 கி.மீ இடத்திலிருந்தும் அறந்தாங்கி நகராட்சி எல்கை ஆரம்பமாகிறது.

<u>விரிவு படுத்தும் திட்டம்</u>

நகரில் உள்ள சாலைகள் விரிவாக்கத்திட்டம் மற்றம் நகர் சுற்றுப்புறங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் நடப்பு ஆண்டில் நடவடிக்கையில் இருந்தது.

<u>பணியாளர் அமைப்பு</u>

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் 01.04.2020 முதல் 05.11.2020 வரை திரு.த. பாஸ்கர், அவர்கள் ஆணையாளராக (பொ) 06.11,2020 முதல் 24.02.2021 வரை திரு.ஜீ. சுப்பிரமணியன், நகராட்சி பொறியாளர், 24.12.2021 முதல் 31.03.2021 வரை திரு.பா. அய்யனார், நகராட்சி பொறியாளர் ஆகியோர் ஆணையாளர் பொறுப்பு வகித்துள்ளனர்.

அறிக்கை ஆண்டில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை திரு வெ. சுரேஷ்பாபு, உதவியாளர் மேலாளர் பொறுப்பாகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

**<u>கூட்டங்கள்</u>**

மாதந்தோறும் சாதாரணக்கூட்டம் மற்றும் அவசர நிமித்தம் அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. அறிக்கை ஆண்டில் கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.

01.04.2020 முதல் 31.03.2021 முடிய கூட்டப்பட்ட கூட்டங்களின் விபரம்

| | கூட்டம் | பொருள்கள் |
|---|---|---|
| ஒப்பந்தக்குழு கூட்டம் | – | – |
| சாதாரணக்கூட்டம் | 10 | 126 |
| அவசரக்கூட்டம் | 7 | 34 |
| சிறப்புக்கூட்டம் | – | – |
| நியமனக்குழு கூட்டம் | – | – |

**2. <u>பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்:</u>**

| வ.எண் | திருவாளர்கள் | பணி விபரம் | முதல் | வரை |
|---|---|---|---|---|
| 1. | த.பாஸ்கரன் | பொறியாளர் (ம) ஆணையாளர்(பொ) | 01.04.2020 | 05.11.2020 |
| 2. | ஜீ. சுப்பிரமணியன் | பொறியாளர் (ம) ஆணையாளர்(பொ) | 06.11.2020 | 23.02.2021 |
| 3. | பா. ஆய்யனார் | பொறியாளர் (ம) ஆணையாளர்(பொ) | 24.02.2021 | 31.03.2021 |
| 4 | வெ. சுரேஷ்பாபு | மேலாளர் (பொ) | 01.04.2020 | 31.03.2021 |
| 5 | சி. சேகர் | துப்புரவு ஆய்வாளர் | 01.04.2020 | 31.03.2021 |
| 6 | ஆர். அன்பழகன் | நகரமைப்பு ஆய்வர் | 01.04.2020 | 31.03.2021 |
| 7. | சு. தேவராஜ் | வருவாய் ஆய்வர் | 01.04.2020 | 31.03.2021 |
| 8. | வெ. சுரேஷ்பாபு | கணக்கர் | 01.04.2020 | 31.03.2021 |

**<u>தணிக்கை நடைபெறும் பொழுது திரு.த.முத்துகணேஷ், துப்புரவு அலுவலர் ஆணையாளராக பொறுப்பு வகித்துள்ளார்.</u>**

**<u>2019– 2020 வழக்குகள் மற்றும் சட்ட செலவுகள்:</u>**

ஆண்டு இறுதியில் முடிவு பெறாத வழக்குகள் :
அறிக்கைஆண்டில் வழக்கறிஞருக்கு
கொடுக்கப்பட்ட தொகை :
சென்ற ஆண்டு செலவிடப்பட்டதொகை : 30000

***4) பொறியாளர்*** பிரிவு

இந்நகராட்சியில் மூன்றாம்நிலை நகராட்சிப் பொறியாளர் பதவி ஏற்படுத்தபப்பட்டது. அறிக்கை ஆண்டில் பொதுப்பணி பணியாளர்கள் சம்பளம் ரூபாய் **510.63** லட்சம் வழஙகப்பட்டது.

**போக்குவரத்துக்கள்: சாலைகள், பாலஙகள், கரிசல் கற்கட்டிடஙகள் சாலைகள்:**

இந்நகராட்சி வழியாகச்செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளும் மாநில நெடுவழிச்சாலைகளின் விவரஙகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1) மாநில நெடுஞ்சாலை – 7,00 கி .மீ
2) மாவட்ட நெடுஞ்சாலை – 2.00 கி.மீ

தற்பொழுது அனைத்து தார்சாலைகளும் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை விவரஙகள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | சிமிண்ட் சாலை | : | 20,55 கி.மீ |
| 2) | தார் சாலைகள் | : | 43.47கி.மீ |
| 3) | WBM சாலைகள் | : | 4.55 கி.மீ |
| 4) | மண் சாலை | : | 13,87 கி.மீ |
| | | | 93.45 கி.மீ |

6) **(அ) உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்**

1. அரசினர் மேல்நிலைப்பள்ளிகள், ஆண்கள் 1 பெண்கள் –1

**7) தனியார் பள்ளிகள் பொது நூலகங்கள்**

பொது நூலகங்கள் அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. ஆனால் மாவட்ட கிளை நூலகம் ஒன்று இந்நகரில் செயல்பட்டு வந்தது.

8) <u>சந்தைக்கு மற்றும் விழாக்களுக்கு தண்ணீர் வசதி</u>

அறிக்கை ஆண்டில் உள்ளூர் முக்கியத்துவம் பெற்ற திருவிழாக்களும் வாரச்சந்தையும் வழக்கம்போல் நடைபெற்றது. தேவையான சுகாதாரப்பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இந்நகராட்சி பகுதிக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்பாட்டில் 9 குடிநீர் விநியோகத்தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் ஒருநாளைக்கு சுமார் 28.80 லட்சம் லிட்டர் கொடுக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொதுக்குழாய்கள் | -- | 121 |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | -- | 7734 |

*9) <u>சாக்கடை</u>*

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லை திறந்தவெளி கால்வாய் 52.25 கி.மீ. பராமரிக்கப்பட்டு வருகிறது.

**10)** இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் பராமரிப்பு செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு, சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி எல்லையில் வெள்ளாறு செல்கிறது.

11) *<u>தெருவிளக்கு வசதி.</u>*

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்ட விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | LED | | -- | 1543 |
| 2. | சோடியம் – வேப்பர் விளக்கு | 250 W | -- | 196 |
| 3, | உயர்மின் கோபுர விளக்கு | 250 W | – | 2 |
| | | மொத்தம் | – | 1749 |

<u>12) பொது நலம் மருத்துவ உதவி</u>

இந்நகராட்சி எல்லைக்குள் அரசு மருத்துவமணை 15 தனியார் மருத்துவ மனைகளும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன.

<u>அரசு மருத்துவமனை</u>

1. <u>அரசு மருத்துவமனை</u>

இந்நகராட்சியின் கீழ் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் 2004ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஒரு சுகாதார ஆய்வாளர் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்து வருகின்றார். அறிக்கை ஆண்டில் சுகாதாரத்தைப்பற்றிய பிரசுரங்கள் சுகாதார சிப்பந்திகளைக்கொண்டு விளம்பரம் செய்யப்பட்டு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. 27 வார்டுகளில் அவ்வப்போது திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

***13). இடவசதி தளவாடஙகள்:***

நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நகர்ப்புற சுகாதார அமைப்பு இயங்கி வருகிறது.

***14) பொது சுகாதாரம்:***

இந்நகராட்சியில் நகர் நல அலுவலர் பதவி இல்லை அறிக்கை ஆண்டில் சுகாதார அலுவலர் மற்றும் அனுமதிக்கப்பட்ட சுகாதார ஆய்வர் இரண்டு பணியிடஙகளில் ஒருவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். அனுமதிக்கப்பட்ட நிரந்தர துாய்மை பணியாளர்கள் 100 நபர்களில் 68 நபர்கள் ஒப்பந்த பணியாளர்கள் 76 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்தலைப்பின் சம்பளம் மற்றும் இதரவகையினர் நடப்புஆண்டில் ரூ.100.21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 2019–20ல் ரூ. 100.21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

***15) பிறப்பு விகிதம், மற்றும் மகப்பேறு உதவி***

அறிக்கையாண்டில் பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் பணியை சுகாதார ஆய்வாளர் பதவிக்குரிய முழு அதிகாரம் பெற்ற ஒரு சுகாதார ஆய்வர் பார்த்து வருகிறார். நகராட்சி பராமரிப்பின்கீழ் இருந்து வந்த மகப்பேறு நிலையம் 2008 ல் அரசு பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டது. பிறப்புகள் பதிவு செய்வதில் அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் பிள்ளைப்பேறு பார்க்கப்படவில்லை. நகராட்சியால் அறிக்கையாண்டில் மகப்பேறு இல்லை குழந்தைகள் காப்பகம் பராமரிக்கப்படவில்லை.

**16) இறப்பு விகிதம் மற்றும் தொற்று நோய்கள்:**

| | | |
|---|---|---|
| 1) | அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் | – 232 |
| 2) | காலரா, அம்மைபோன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன. | – இல்லை |

**சென்ற அறிக்கை ஆண்டில்**

| | | | |
|---|---|---|---|
| 1) | காலரா | -- | இல்லை |
| 2) | அம்மை | -- | இல்லை |
| 3) | பிளேக் | -- | இல்லை |
| 4) | மலேரியா | -- | இல்லை |
| 5) | சீதபேதி | -- | இல்லை |
| 6) | காய்ச்சல் | -- | இல்லை |
| 7) | பிறமுச்சுவை நோய்கள் | -- | இல்லை |
| 8) | பிறகாரணஙகளால் | -- | 232 |
| 9) | வெறிநாய் கடியினால் இறப்பு | -- | இல்லை |

இந்நகராட்சியில் கொசுத்தடுப்பு ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதார இயக்குநர், முதுநிலை பூச்சியியல் வல்லுநர் அறிவுரைகளின்படி, Egg, larva, Pupaadult, Stage க்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பான் அபேட் பயால் லார்வி புழு என்ற மருந்து மூலம் கொசு உற்பத்தி ஒழிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக தண்ணீர் தேஙகி உள்ள இடஙகளில் மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் 41 டெங்கு பணியாளர்கள்

மூலம் மருந்து தெளிக்கப்பட்டது மற்றும் பைரித்திரம் கொண்டு கொசு மருந்து புகை இயந்திரம் மூலம் புகைபரவச்செய்து கொசுக்களை அழிக்கப்பட்டும் வருகிறது. கொசு ஒழிப்பு பணிக்கு வாகனத்தில் பொருத்தப்பட்ட கைத்தெளிப்பான் மூலம் பெரிய புகைமருந்து இயந்திரம் சிறிய புகை மருந்து இயந்திரங்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் நபர்கள் இல்லை.

**17) கொக்கிப்புழு தொற்று:**

அறிக்கை ஆண்டில் இந்நோய் நகராட்சிப்பகுதியில் இல்லை.

**18) நோய்தடுப்புத்திட்டம்:**

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள குழந்தைகளுக்கு தற்காலிக வேக்சினேட்டர் மூலமாக சொட்டுமருந்து ஒவ்வொரு புதன் கிழமையும், வழஙகப்பட்டுவருகிறது. ஆண்டுதோறும் பள்ளிக்கான வளர்இளம் பெண்களுக்கு விட்டமன் மருந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் துணை இயக்குநர், பொது சுகாதாரம், அறந்தாஙகி அவர்களின் உத்திரவின்படி, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

***19) குடும்ப நலத்திட்டம்:***

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை.

***20) பொதுசுகாதாரம் துப்புரவு பாதுகாப்பு:***

அறிக்கை ஆண்டில் 11 பொதுக்கழிவறைகளும், 3 சமுதாய கழிவறைகளும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை, மாலை இருமுறை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி லாரிகள் மூலமாகவும் புதுக்கோட்டை ரோட்டில் உள்ள உரக்கிடஙகில் கொட்டப்பட்டு வருகிறது.

நகரில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் முழுதும் காலை ஒரு முறை சுத்தம் செய்யப்படுகிறது. மேற்படி பணிகளை நான்கு மேற்பார்வையாளர் மூலம் மேற்பார்வையில் செய்யப்படுகிறது. நகரின் சேகரிக்கப்படும் குப்பைகளை 4 சிறிய ரக லாரி (LCV) மற்றும் 22 BOU மூலம் தினந்தோறும் அப்புறப்படுத்தப்படுகிறது.

**21) துப்புரவு பணி:**

நகராட்சியில் 12246 மொத்த குடியிருப்புகள் உள்ளது. துப்புரவுப்பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வனே செய்து வருகின்றனர்.

நகராட்சியில் மலேரியா நோய் ஒழிப்புத்திட்டம் கூடுதல் பணியாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5 துப்புரவு பணியாளர்கள் மருந்து தெளிக்கும் பணியாகளை மேற்கொண்டு வருகின்றார். நகராட்சி பகுதி ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வாரம் ஒரு முறை கொசு லார்வா ஒழிப்பு தெளிக்கப்படுகிறது. பணியை சுகாதார ஆய்வாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**22) கலவை உரம்**

இந்நகராட்சி விராலிமலை சாலையில் சர்வே எண்.4–ல் சுமார் 6 ஏக்கர் நிலப்பரப்பில் குப்பை சேகரிக்கும் இடம் அமைந்துள்ளது. கடந்த 2000–ம் வருடம் முதல் கலவை உரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.
ஏல்.என்.புரம் மேல்நிலை தொட்டி வளாகத்தில் நுண்ணியிர் உரக்கிடஙகு மற்றும் மண்புழு உரம் தயார் செய்து மண்புழு உரம் கிலோ 6 வீதம் கலவை உரம் கிலோ 2 வீதம் விற்பனை செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் கொள்முதல் நகராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்டுள்ளது.

**23. உணவு கலப்பட தடைச்சட்டம்:**

உணவு பாதுகாப்பு சட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

***24).*** வாடகைக்கு ஓடும் கார்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

***25)*** சந்தைகள், பேருந்து நிலையம் ஆடுவதை நிலையம், மீன் அஙகாடி நகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன.

அறிக்கையாண்டிலும், அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு.

| ***ஆண்டு*** | ***சந்தை*** | கட்டண கழிப்பறை | ***ஆடுவதை சாலை*** |
|---|---|---|---|
| 2018–2019 | 4.49 லட்சம் | 6.32லட்சம் | 1.50 லட்சம் |
| 2019–2020 | 4.72 லட்சம் | 6.64 லட்சம் | 1.57லட்சம் |
| 2020–2021 | 10.11 லட்சம் | 8.74 லட்சம் | 1.62 லட்சம் |

***26) சந்தைகள்:***

இந்நகர் மன்றம் தினசரி காய்கனி சந்தை பராமரிக்கப்பட்டு வருகிறது. நாளஙகாடியில் 84 பெரிய கடை கட்டப்பட்டுள்ளன. நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அனைத்தும் பொது ஏலம் மூலம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடைகள் மூலம் அறிக்கையாண்டில் ரூ.51.68 லட்சம் வருமானம் வரப்பெற்றது.

**27) பேரூந்து நிலையம்**

அடிப்படை வசதி கட்டமைப்பு நிதியின் கீழ் ரூ. 70.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேரூந்து நிலையம் மற்றும் கடைகள் கட்டப்பட்டு 1977 –ல் பயன்பாட்டிற்கு வரப்பெற்றது. நகராட்சி பேருந்து நிலையத்திற்கு நாளொன்றுக்கு சாரசரியாக 140 பேருந்துகள் வந்து செல்கின்றன. அறிக்கையாண்டில் பேருந்து நிலைய வசூலை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**28) மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் :**

புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டப்பட்டு பயன்பாட்டின் உள்ளது.

***<u>29) வாடகை உந்து நிலையம்.</u>***

வாடகை உந்துநிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

**30) சாலையோர மரங்கள்**

சாலை ஓர மரஙகள், இந்நகர்மன்றம் பராமரித்து வருகிறது.

**<u>31) நகரமைப்பு பிரிவு</u>**

அறிக்கை ஆண்டில் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் இருந்துவருகிறது.

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் சஙகிலியாளர் பணி நியமனம் செய்யப்படவில்லை இந்நகராட்சி எல்கையில் உள்ள தெருப்பகுதிகள் மட்டும் 1988ம் ஆண்டில் அளந்து பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது நகர புல அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி முடிந்துள்ளது. இந்நகராட்சியில் ஏற்கனவே ஒன்பது நகரமைப்பு திட்டஙகள் செயலில் இருந்து வந்துள்ளது. இந்நகரமைப்பு திட்டங்களில் 1 முதல் 4 வரை இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அறந்தாஙகி நகராட்சிப்பதுதிக்கு காவேரி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி கிடைக்கப்பெற்றுள்ளதால் வளர்ச்சிகள் பல்வேறு வகைகளில் ஏற்பட்டுள்ளது. தற்போது, ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் திட்ட உத்தேசஙகளுக்கு ஏற்றதாக இல்லாமல் மாறுதல் செய்ய வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் மேற்படி உத்தேசஙகளை தயாரிக்கவும் அமுல் படுத்தவும் போதிய அலுவலர்களும் பணியாளர்களுக்கும் மாதம் மாதம் ஊதியம் வழஙக நிதிநிலையும் இல்லை. நில அளவை பதிவேடுகள் இல்லாமையால் நகரளவை சஙகிலியாளரும் நியமிக்கப்படவில்லை. மேலும், பொருளாதார நிதிக்குறைவின் காரணமாக பொதுநிதியிலிருந்து ஒரு விழுக்காடு தொகையை உள்ளூர் திட்டக்குழுமம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

***<u>33. வரைகடப்புகள்</u>***

இந்நகராட்சியில் பராமரிப்பிலுள்ள தெருக்கள் யாவும் 1988 ம் ஆண்டு சர்வே செய்யப்பட்டவை நகரளவையர் தெருக்களில் ஏற்படும் வரை கடப்புகளை அளந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

***<u>சொத்துவரி கேட்பு வசூல் நிலுவை விவரம்</u>*** ( லட்சத்தில்)

| | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 62.35 | 211.47 | 273.81 |
| வசூல் | 20.93 | 164,69 | 185.62 |
| நிலுவை | 41.44 | 46,78 | 88.19 |

அறிக்கை ஆண்டில் 1.10.98 முதல் சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டது

**<u>பொது வருவாய்</u>**

சொத்துவரி 81 (1)ன் படி சொத்துவரியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை சேர்ந்துள்ளன.

வருட வாடகை மதிப்பில் அரைவருட விதிகம்

| | | |
|---|---|---|
| 1) | பொதுக்காரியங்களுக்கு | 4% |
| 2) | கக்கூஸ வரி | 2% |
| 3) | தண்ணீர் சாக்கடை வரி | 2% |
| 4) | விளக்குவரி | 2% |
| 5) | கல்வி வரி | 2.5% |

**காலி நில வரி**

அரசாணை எண் 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 20.8.2009ல் வெளியிடப்பட்டுள்ள விதிகளின்படி, காலிமனை வரி விதிப்புகளை 1.10.2009 முதல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.41802/2009/ஆர்1 நாள் 7.9.2009 தெரிவித்துள்ளவாறு நகர்மன்ற தீர்மான எண் .1115 நாள்.30.10.2009ன்படி சதுரடிக்கான தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு காலிமனை வரிவதிப்பு செய்யப்பட்டு வருகிறது.

தொழில் வரிஅரசு ஆணை எண்.11 நாள்.12.1.99ன் படி புதிய தொழில்வரி சட்டம் அமுலுக்குவந்துள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.12/2013/அ4 நாள்.1609.2013ன்படி தொழில்வரி சீராய்வு செய்யப்பட்டு தொழில்வரி திருத்தம் செய்யப்பபட்டு அதன்படி வரிவிதிப்பு செய்யப்பட்டு தொழில் வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

***வரி விதிப்பு விகிதஙகள்***

வ.எண். அரைவருட வருமானம் மொத்தச்சம்பளம் அரைவருடவரி

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் | 01.10.2018க்கு பின் நிர்ணயம் செய்யப்படும் அரையாண்டு தொழில்வரி (ரூ) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ரூ.21,000/– வரை பெறுவோர் | இல்லை |
| 2 | ரூ.21,001/– முதல் 30,000/– வரை | 165 |
| 3 | ரூ.30,001/– முதல் 45,000/– வரை | 412 |
| 4 | ரூ.45,001/– முதல் 60,000/– வரை | 826 |
| 5 | ரூ.60,001/– முதல் 75,000/– வரை | 1235 |
| 6 | ரூ.75,001/– முதல் அதற்கு மேல் | 1250 |

**தொழில்வரி**

**தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை விவரம்**

(ரூபாய் லட்சத்தில் )

| | | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கேட்புத்தொகை | 33.85 | 40.98 | 74.84 |
| 2. | மொத்த வசூல் | 3.81 | 24.26 | 28.07 |
| 3. | நிலுவை | 30.05 | 16.72 | 46.77 |

**<u>35) பொருளாதார நிலை ரொக்கமாக முதலிடு வழியாக</u>** (ரூபாய் இலட்சத்தில் )

| | | |
|---|---|---|
| ஆண்டின் வருமானம் ( மான்யம் மற்றும் முதலீடு நிதி) | – | ரூ.819.97 இலட்சம் |
| ஆண்டின் செலவு | – | ரூ.988.98 இலட்சம் |

***<u>கடன் தொகை செலுத்தியது</u>***

31.3.2021 ல் கடன் நிலுவை – ரூ.37.7 இலட்சம்

***<u>தணிக்கை:</u>***

| | |
|---|---|
| அறிக்கை ஆண்டில் தொடக்கத்தில் இருந்து தணிக்கைத்தடைகள் | –– 356 |
| அறிக்கையாண்டில் வரப்பெற்றது மொத்தம் | –– 121 |
| அறிக்கை ஆண்டில் முடிவு பெற்றவை | –– – |
| அறிக்கையாண்டில் இறுதி நிலுவை | –– 477 |

தணிக்கைத்தடை நிலுவையில் உள்ளதை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

அறந்தாங்கி நகராட்சியின் கட்டுப்பாட்டில் நகராட்சி நடுநிலைப்பள்ளி 2 மற்றும் நகராட்சி துவக்கப் பள்ளி 1 ஆகிய மூன்று பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள், பள்ளிச்சத்துணவு ( SCHOOL NOON MEAL ) என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. 5 வயது முதல் 14 வயதுள்ள ஆண் பெண் இருபாலருக்கு சுமார் 44 பேர்கள் நாள் ஒன்றுக்கு மதியஉணவு அருந்தி வருகிறார்கள். சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் மூலம் அனுமதிக்கப்படும் மான்யத்தில் (ADVANCE GRANT) இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் நன்முறையில் செயல்பட்டு வருவதோடு பொதுமக்கள் அதனால் அனைத்து பயன்களும் அடைந்து வருகின்றனர்.

## முடிவுரை

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி. பொது சுகாதார வசதி மற்றும் தெரு விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வில்லாமல் வழஙகி நகராட்சி நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் அனுப்பப்படும் கருத்துரைகளை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதுபோல் இந்நகராட்சியின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த அனைத்து உள்/வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையினை முடிக்கிறேன்.

**ஆணையாளர்**
**அறந்தாஙகி நகராட்சி.**